Appendix I

[*Vide* answer to starred question No. 117 on page 9.]

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் முதல் ஆண்டு மருத்துவப் பட்டப் படிப்பு (எம்.பி.பி.எஸ்.) முதல் ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பு (பி.ஈ), ஆகிய தேர்வுகள் எழுதிய மாணவர்கள் எண்ணிக்கையையும் அவர்களில் தேர்ச்சி அடையாதவர்கள் எண்ணிக்கையையும் குறிக்கும் பட்டியல் (சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப்பட்டது) :—

ஆண்டும் மாதமும்.	தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை.	தேர்ச்சி அடையாதவர்கள் எண்ணிக்கை.	பல்கலைக்கழகம் அனுமதித்த அதிகப்படி வாய்ப்புகள் அனைத்திலும் தோல்வியுற்றவர்கள் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
முதல் ஆண்டு மருத்துவம்—			
1964 ஏப்ரல்	881	350	விவரம் இல்லை.
1964 செப்டம்பர்	335	135	,,
1965 மே	959	362	30
1965 செப்டம்பர்	323	109	1
1966 ஏப்ரல்	1,050	328	30
1966 செப்டம்பர்	409	95	..
1967 ஏப்ரல்	1019	246	4
முதல் ஆண்டு பொறியியல்—			
1964 மார்ச்	1,128	417	விவரம் இல்லை.
1964 செப்டம்பர்	403	106	,,
1965 மார்ச்	1,300	357	,,
1965 செப்டம்பர்	309	58	,,
1966 மார்ச்	1406	511	,,
1966 செப்டம்பர்	491	137	,,

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் தேதியன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளில் செய்யப்பட்ட மாற்றங்களின் படி முதல் ஆண்டு மருத்துவம், முதல் ஆண்டு பொறியியல் ஆகிய பட்டப் படிப்பு வகுப்புக்களில் படிக்கும் மாணவர்கள் அம் முதல் ஆண்டுப் பரீட்சை யில் மூன்று வாய்ப்புகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும். (ஒரு தேர்வு எழுத மாணவர் வராவிட்டால் அதுவும் ஒரு வாய்ப்பாகக் கணக்கிடப்படு கிறது.) ஒரு மாணவர் பரீட்சை எழுத முடியாமற் போனதற்காக காரணங் கள் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு திருப்திகரமாக இருந்தால், அம் மாணவர் மேற்படி பட்டப்படிப்பில் சேர்ந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டு கள் முடிவடைவதற்குள் அம்மாணவருக்கு இன்னுமொரு வாய்ப்பு அந் நிர்வாகக் குழுவால் அளிக்கப்படக்கூடும்.

இரண்டாவது ஆண்டு மருத்துவம், பொறியியல் பட்டப்படிப்பு வகுப்பு இறுதித் தேர்வையோ அல்லது பின்னால் வரும் ஆண்டுகளில் வகுப்பு இறுதித் தேர்வுகளையோ இத்தனை வாய்ப்புக்களுக்குள் தேற வேண்டும் என்று வரையறை இல்லை.